**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | DVC.01/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | ம.சா.1 |
| Name : | திருமதி.அமுதா |
| Husband Name : | திரு.சுப்ரமணியன் |
| Village : | வி.களத்தூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 60 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.லட்மணபெருமாள், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(மனுதாரர் ஆஜர். 1ம் எதிர்மனுதாரர் ஆஜர் 2,3 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக அவர்களுடைய வழக்கறிஞர் ஆஜர் ).**
**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

(CRLMP.No.1503/2025 மனு அனுமதிக்கப்பட்டு மேலும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி)

1. DVC.No.01/2020 வழக்கானது நீதிமன்றத்தில் கொடுப்பதற்கு 3 மாதத்திற்கு முன்னர் சமூக நல துறையில் பாதுகாப்பு வேண்டி மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு சமூக நல துறையில் எனக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் ஆஜர் ஆகுமாறு விசாரணைக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு நான் தங்கியிருந்த சின்னாறு கிராமம் சர்க்கரை ஆலை ரோடு என்ற முகவரிக்கு வந்தது என்றால் அந்த வீட்டில் நான் வாடகைக்கு இருந்தேன். அதனால் அந்த விலாசத்திற்கு தான் அறிவிப்பு வந்தது. அங்கு என்னை விசாரணை செய்து அதன்படி விசாரணை அறிக்கை தயார் செய்தில் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. அவர்கள் படித்து காண்பித்தார்கள். அதில் நான்கையொப்பம் இட்டேன். அந்த விசாரணை அறிக்கையில் இருப்பிட கோரிக்கை கேட்டு ஒரு சர்வே நம்பரை நான் சொல்லி தான் அவர்கள் அதில் குறிப்பிட்டார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் இருப்பிட அறிக்கை கேட்ட சர்வே நெம்பர் கொண்ட வீட்டை எனது மருமகளுக்கு அவரது தாயார் தான செட்டில்மெண்ட் எழுதிக்

கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர்கள் 6ல் ஒரு பாகம் கொண்ட வீட்டைத் தான் எழுதிக் கொடுத்தார்கள். எனது கணவரின் பெயரில் உள்ள வீட்டை எழுதிக் கொடுக்கவில்லை. எனது மருமகள் பெயரில் ஏற்பட்ட தானப்பத்திரத்தில் எதிர்த்து பெரம்பலூர் சப் கோர்ட்டில் 1ம் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நானும், எனது மகனும் ஒன்றாகத்தான் உள்ளோம் எங்களுக்குள் விரோதம் இல்லை என்றால் சரியல்ல நான் தனியாக தான் இருக்கிறேன். நீதிமன்றத்திற்கு விசாரணக்காக வரும்போதெல்லாம் நான் எனது மகனுடன் தான் வருவேன் என்றால் என்றைக்காவது ஒரு முறை எனக்கு உடல்நிலை சரியில்லை என்றால் எனது மகனுடன் வருவேன். என்னை விசாரணை செய்து சமூக நலத்துறையினர் குடும்ப வன்முறை அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் நான் நான்கு நிகழ்வுகளை சொல்லியுள்ளேன் என்றாலும், அதில் முதல் மூன்று நிகழ்வுகள் 2010, 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளில் நடைபெற்றதாகவும் நான்காவதாக நிகழ்வு 2019ல் நடைபெற்றதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் அது என்ன விவரம் என்று குறிப்பிட்டு தெளிவாக சொல்லி கேள்விகள் என்னிடம் கேட்கவில்லை என்பதால் எனக்கு தெரியவில்லை. நான் மேற்கண்ட நான்கு நிகழ்வுகளும் நடக்கவில்லை என்பதால் தான் எனக்கு தெரியவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2019ல் நானும், எனது மகன் பாலமுருகனும் நீதிமன்ற உத்தரவின்பேரில் 3/7, மேலத்தெரு, வ.களத்தூர் முகவரியில் வசிப்பதற்கு சென்றோம் என்றால் சரிதான். அந்த நீதிமன்ற உத்தரவு என்ன உத்தரவு என்றால் எனக்கும் 1ம் எதிர் மனுதாரருக்கும் இடையில் நடைபெற்ற விவாகரத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் நான் எனது மகனுடன் மேற்கண்ட முகவரியில் வசிப்பதற்காக சென்றேன். வழக்கு நடைபெற்ற போது அந்த வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி ஆன பிறகு தான் அந்த வீட்டிற்கு சென்றோம் என்றாலும் சரியல்ல. அடிக்கடி செல்வோம் 1ம் எதிர் மனுதாரர் எங்களை அடித்து விரட்டிவிடுவார். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன் அவர்கள் அதை எடுக்காமல் சமூக நலத்துறையில் புகார் கொடுக்குமாறு அனுப்பி வைத்து விட்டார்கள். மேற்கண்ட விலாசத்திற்கு நானும், எனது மகனும் அடிக்கடி செல்வோம் எதிர்மனுதாரர்கள் அடித்து விரட்டி விடுவார்கள் என்று எனது மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்கண்ட வீட்டில்

எந்த பகுதியில் குடியிருந்தோம் என்றால் முதல் தளத்தில் குடியிருந்தோம் தரை தளத்தில் எனது மாமியார் குடியிருந்தார் நாங்கள் அனைவரும் அந்த வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம். அதன்பிறகு 2010ம் ஆண்டு எதிர் மனுதாரர்கள் என்னை அந்த வீட்டிலிருந்து அடித்து விரட்டிவிட்டார்கள். நான் தாக்கல் செய்த மனுவில் மேற்கண்ட விவரங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சமூக நலத்துறையில் மனு தாக்கல் செய்த சமயத்தில் எனது மகன் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கிற்கு எதிராக 1ம் எதிர் மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார் என்றால் எனது மகனுக்கு எதிராக பல்வேறு வழக்குகள் எதிர்மனுதாரர் கொடுத்திருப்பதால் எந்த வழக்கில் மேல்முறையீடு செய்தார் என்று எனக்கு தெரியவில்லை. சிவில் வழக்கில் எனது மகனுக்கு எதிராக 1ம் எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்யக் கூடாது என்பதற்காக எனது மகனுக்கு சாதகமாக எதிர்மனுதாரர்களை மிரட்டும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பழனியம்மாள் மற்றும் 3 எதிர் மனுதாரர் சுரேஷ்க்கு எதிராக எனது மனுவில் எவ்வித குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மனுவில் நான் 3 மாத கர்ப்பமாக இருக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் என்னை வீட்டிலிருந்து விரட்டி விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் ஒரு வாரத்தில் மறுபடியும் வீட்டிற்கே வந்துவிட்டேன். எனது மனுவில் பஞ்சாயத்துக்காரர்கள் முன்னிலையில் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முயற்சி செய்தும், அவர் அதற்கு கட்டுப்படவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய மனுவில் எப்போது, எந்த தேதியில் நான் மீண்டும் வந்து எதிர்மனுதாரருடன் வசித்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருடன் தொடர்ந்து வசிக்கவும் இல்லை அவரால் எனக்கு எவ்வித குடும்ப வன்முறையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நான் எந்த தேதியில் எதிர்மனுதாரருடன் மறுபடியும் வசித்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மனு எதிர்மனுதாரரை பழி வாங்குவதற்காக போட்டது என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யத்தக்க வேண்டியது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.